# பேச்சு - வகுப்பு 1/2

## திருவள்ளுவர்

திருவள்ளுவர், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் பிறந்தவர். அவர் சென்னையில் உள்ள மயிலாப்பூரில் பிறந்தவர் என்று சிலர் கூறுவர். மதுரையில் பிறந்தவர் என்றும் சிலர் கூறுவர்.

தமிழ் என்னுடைய தாய்மொழி. தமிழ் மொழியில் பல நீதி இலக்கியங்கள் உள்ளன. அவற்றுள் மிகவும் சிறந்தது திருக்குறள். அது திருக்குறளை இயற்றியவர் " திருவள்ளுவர்" . அவர் சிறந்த தமிழ்ப் புலவர்.

திருக்குறள் " உலகப் பொது நீதி நூல்" எனப் புகழப் பெறுகின்றது. திருக்குறளை உலகில் பல மொழிகளில் மொழி பெயர்த்துள்ளனர்.

எந்த உயிர்களையும் கொல்லாதிருத்தல், எப்போதும் பொய் சொல்லாதிருத்தல் ஆகிய இரண்டு அறங்களையும் வள்ளுவர் மிகவும் வற்புறுத்திக் கூறுகின்றார்.

திருவள்ளுவரைத் தெய்வப்புலவர், பொய்யாமொழிப் புவவர் எனப் பலவாறு போற்றுகின்றோம். திருவள்ளுவர் தந்த திருக்குறளை நாம் கற்போம்; கற்ற வழி வாழ்வோம்.

**" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு,"**

**நன்றி, வணக்கம்.**